பிஸ்மில்லாஹி.

அமிர்தமெய்ஞ்ஞான

அலங்காரக் கீர்த்தனம்.

இஃது

கபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள்
பேரிலும் மற்றும் ஒலிகள்பேரிலும்,
திருநெல்வேலி ஜில்லா
பழையகாயல்
இபுறாஹிம்சாயபு அவர்கள் குமாரர்
கதிபு செயினுமுகமதுலெப்பை அவர்கள்
பாடியதை,

எம். ஏ. செய்னுமுகம்மதுப்பாவல ரவர்களால்
பரிசோதித்து

ஷை யூர் கணக்கதிய
ஸ்ரீமான்
பிள்ளைமுத்துப்பிள்ளை அவர்கள்
பொருளுதவியால்

சென்னப்பட்டணம்
மூஅய்யதுல் இஸ்லாம் பிரெஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1910.

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
18 OCT 1910
183
MADRAS.
183
4-10

விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்;—அமிர்தமெய்ஞ்ஞான அலங்காரகீர்த்தனமென்னும் இப்பெயர் புனைந்த பதப்புஸ்தகம் சொற்பவிலையில் அச்சிட்டு வெளிவந்திருப்பதால் தேவையுள்ள கனவான்கள் வாங்கிக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதன்விலை அணா ௨.

இங்ஙனம்,

[illegible] சதீபு. இ செயினுமுகம்மது லெப்பை,

பழையகாயல்.

பெரியலொருவர் ஆக்கியோன் பேரில் சொன்ன

சாத்துகவி.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட காயல்நகர் தன்னில் வாழும்
தீனும் இபுறுகீம் சாய்பு பாலன்
சேர்கொண்ட செயினுமு கம்மத் லெவ்வை
நீணிலத்திற் றுஜ்ஜவிலும் பதந்தை வாளில்
கார்கொண்டல் பொழிந்ததுபோற் பெய்தான் மிக்கக்
கனிதேனும் சர்க்கரைபா கிதற்கொவ் வாது
ஆர்கொண்ட காதரா வுத்த செயினு
ரருட் கொண்ட பேரனிவ னதிகுன்றுனே.

மஹாவித்வான்

எம். எ. செயினுமுகம்மதுப் பாவல ரியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சொலக்கரிய சங்கீதம் போல எழு-தன்னிசைபா யின்னிசைகள் தொகுத்துக் கூட்டி, நல்லனவா யமிர்தமெய்ஞ் ஞான மென்னு-நவிலலங் காரக்கீர்த் தனமொன் றீந்தான், பல்லவனுஞ் செறிபழைய காயலூரான்-பதங்காட்டும் வசச்செயினு மதுலெவ்வையாம், கல்வியுளார் பார்த்திடினே தேனும் பாலுங் கலந்ததுபோ லினிக்கு தென்பார் களித்து மாதோ.

பிஸ்மில்லாஹி.

அமிர்த மெய்ஞ்ஞான

அலங்காரக் கீர்த்தனம்.

ஆசிரியவிருத்தம்.

ஆதிநபி யேபெரிய சோதிநபி யேதீனை
யப்பியின் றாத்தும் நபியே
அண்டபரி பூரண மெண்டிசை யெலாம்புகழ
அன்பாக வந்த நபியே
சோதி யிறையோனவன் மிஃறாஜி யேறிவரும்
நீதி பெருமை பூண்ட நபியே
சொந்த மறையோனவன் றன்றுடைய ஆதம்நபி
தொல்வழியில் வந்த நபியே
பாதியாய் மதிதனை யமாவாசை யிரவினிற்
பதியோ டழைத்த நபியே
[illegible]ன் வேதங்கள் மூன்றுக்கு மேனெறி
புறுக்கான் விளைத்த நபியே
பாதபங் கயங்காருந் தோகைநபி யேயெங்கள்
பயங்காம்ப ரான நபியே
பட்சமுட னிக்கவிதை சொல்லும்ப லதனைப்
பரிகாத் தருள்வீர் நபியே.

எழுசீர் விருத்தம்.

மாநிலா மணியே தேவர்கள் சிரமே
மட்டிலாக் காரணக் கடலே
மாசறு மனுடர் நாதிதரு மொளியே
வள்ளலாய் வந்தவெம் மரசே
தேசொளி பெருகும் ஜெயிலானி யூரில்
தீன்பிலை தரித்தகண் மணியே
பாசமென் சிறியேன் சின்னத்தம் பியின்றன்
பவப்பிழை பொறுத்தருள் கோனே.

இன்னிசை.

ஆதரவில் கால மனேகம்பிணி யால்வருந்தும்
பேதை நெபி நின்று பிணிகளைத் தானகற்றும்
வாடாது மக்கம் வாழப்புநல் லாறுதலில்
தேடரிய கண்மணியே ஜெம்மல்யா முகம்மதுவே.

கடவுள் வாழ்த்து விருத்தம்.

ஆதியே ஒளியே அல்ஹம்து வில்லா
அகிலத்தைக படைத்தவன் நீயே
சோதியே தெளிவே புகரனல் லாவே
சொல்லுதற் கரிய நற் கோவே
வேதமா மறைகள் நான்கையும் விரித்து
விளங்குமெய் சாஸ்திர மாறும்
காதனே வகுத்த நீதியே யுன்னை
நம்பினே னிதற்குநீ காப்பே.

நபி நாயகர் துதி விருத்தம்.

ஆமெனப் பொருளே ஆண்டவன் றூதே
அஹமதே இறசூலல் லாவே
காயெனத் தங்க ளாலசு காபி
கருணைவி னயபக்க ருமறு
தாயென உதுமான் வேதங்க ளனைத்தும்
தரணியிற் கோர்வைகள் செய்தோர்
நாயனி னருசுப் புலியலி பாதம்
நாவினிற் புகழ்ந்தினி துரைப்பாம்.

இ து வு ம து.

காரண நபியின் கண்மணி பேரர்
கருணையா மபுசாலி புதல்வர்
வாரணி ஜெயிலா னதிற்பிறந் தனர்கள்
மாதுநல் பாத்தியா சிலர்
தாரணி மீதிற் றருட்பகு தாது
தானவ் வெளிமுகிய தீனின்
வைரெனும் பகுதா தொசவிவெனுங் கடலே
வுமதிருப் பதமலர் துதிப்பாம்.

வெண்பா.

வே..ன் பிணிதீர்த்தாள் வேந்தநபிற சூல்நபினுர்
பாதார விந்தப் பதமலரை ஆதரமாய்
சிந்தனித்த யெப்பொழுதினமும் நெஞ்சில்வைத்துக் கொண்டாடக்
கத்தனெனியிரசூக் காப்பு. 7

பதம்.

பல்லவி.

இந்த வேளை யென்தன் மீதிலே கிருபை செய்வீர். இந்த

அநுபல்லவி.

சொந்தமாவும் மக்காவாழும் கோமானிற சூல்நபியே
சிந்தையுடன் வந்துதானே தந்து ரட்சிப் பீர்நபியே. இந்த

சரணங்கள்.

மன்னர் முன்னர் போற்று மெங்கள் வள்ளலிற சூல்நபியே
உன்னுங்கலி மாவிற்சேர வுதவி செய்வீர் நன்னபியே. இந்த

காட்டுமா னக்குப்பிணை மீட்டுவைத்த நாயகமே
கள்ளனவன் வேடனையும் உள்ளிஸ்லா மாக்கினீரே. இந்த

நஞ்சிபுசியில் கண்படாமல் நரகம்வந்தெ னைத்தொடாமல்
கெஞ்சியுமைக் கேட்டுகந்து நெஞ்சுருகி வாடுகிறேன். இந்த

பல்லவி.

வருவீர் பதந்தருவீ ரெங்கள் வள்ள லிறசூலே.

அநுபல்லவி.

வள்ளலிற சூலேயெங்கள் உள்ளங்குளி ரத்தங்கள்
வனசமலர்ப் பாதந்தேடி வருந்துகிறேனையா. வருவீர்

சரணங்கள்.

மதியை வகுத்திரு பிளவாய் வானில்வர வழைத்தோரே
வானசநபி நாயகமே வந்து எனையாளும். வருவீர்

அன்பியா நபிகளுக்கும் அனைவருக்கு மதிபதியே
ஆதரித்து எனையாளு மன்ன லிறசூலே. வருவீர்

மக்கா அப்துல் லாவின் பாலர் மங்கையாமி னாவின்பாலர்
மன்னர்நபி யாகவந்த அண்ண லிறசூலே. வருவீர்

பையல்லெயி லுமதாவின் பாவம்பிணி தீர்த்துத்தங்கள்
பாதார விந்தக்கொடுத் தருளுமிறசூலே. வருவீர்

கொச்சகம்.

ஆதிபின்ற யோன்றாக றகும திறகுல் நபியே
சோதியுயிர் கட்கெல்லாம் துய்ய பெரும்பொருளே
நீதி குல்றயாமல் நித்தமுமே யென்னாவில்
ஓதிப் புகழ உதவிசெய்வீர் நன்னபியே.

பல்லவி.

வருவீர் வருவீர் நன்னபியே—கதம்…
தருவீர் தருவீர் …னபியே

வருவீர் வருவீர் ம…லாது மஜ்லிசில
தருவீ ருமதிகதம் தாறேன்றிரு யிறகுல் நபியே. வரு

சரணங்கள்.

ஆரணி மக்கம்வா முப்துல்லா பாலனே
ஆமினா ரீன்றிடு மன்னல் முஹம்மதே. வருவீர்
பொன்னிலங்கு மக்கமா நகர்க்கரசே சாதே
புண்ணிய ராகவந்த நன்னபி யுல்லாவே. வருவீர்
இருபொழு தினும்பாடும் பையல் நெயினுமதுக்
கிருபாத மலரருள் தாவே யிதுசமையம். வருவீர்

"ஐயோ நானென்ன செய்வேன்"

ஆண்டவ பலனிதுவோ என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ஐயோ நானென்ன செய்வேன் ஆலநபி நாயகமே.

அநுபல்லவி.

வையகத்தில் நானும்பாவி வருந்துகிறே னும்மைநாடி.
மெய்வழியைத் தேடிவிட்டால் வேணுமிடஞ் சேரலாமே. ஐயோ

வாசி வழிநடந்து, வல்லவனைத் தான்தொழுதால்
தேசி தனிலேறிச் சென்று வருசுவேதான். ஐயோ

ஆதி யெழுத்தின்படி யனுவாகிலுந் தப்பாதடி
சோதி மஹ்சரிலே · சொர்க்கங் கிடைக்குமடி. ஐயோ

பாடும்கெயி னுமதுவின் பாவம் பிணிகள் தீர்த்து
நாடிய நாட்டப்படி நடத்திடுவாய் நாயகனே ஐயோ

பல்லவி.

இந்த வனம் பார்க்க பார்க்க இன்பமிக மீறுதையா.

அநுபல்லவி.

விர்ஜையலங் காரமுறும் வேதநபியாயிருந்த
நந்தவனந் தன்னைப்பார்க்க நாமுமங்கேபோவோம்வாடி. இந்த

சரணங்கள்.

பூத்தலர்த்திடுமுகமும் புன்னகைதாளேகுடமும்
பாத்திரத்திற்றோற்றும்பத பங்கையம்பார்த்தேனென்சொல்ல.
நாற்றமுள்ளநன்மலரே நங்கையரேமாதரசே
பூத்திருக்கும் புஷ்பங்கள் பூங்காவனந்தன்னைநாடி. இந்த
வையகந்தில் நானும்பாவி வருந்தவேண்டி மாமயிலே
போகவேணு மெந்தன்சகி பூங்காவனந் தன்னைநாடி. இந்த
ஆதியுந்த னருளினாலே அண்ணல்நபி கிருபையினால்
பேதைநெயி னாமுகம்படு பிணியகலந் தானேடி. இந்த

பல்லவி.

உள்ளமிரங்கியென்னை யாளும்-தங்க
ரூபயபதம்நம்பினே னென்னாளும்.

அநுபல்லவி.

வள்ளலப்துல்லா கண்மணியே-எங்கள்
வஞ்சியாமினார் தன்மகவே
வள்ளல்நபியென துள்ளங்குளிர்ந்திட
வஞ்சிகதிஜாவின் மணாளரே. உள்ள
ஜெகமே லொருபிடி மண்ணெடுத்தே-பொல்லாப்
பகைவ னபுஜகில் படையுடைத்தே
சுகமே தரவர வுமது கிருபைகள்
செய்ய வரவேணும் தையிமாநபி. உள்ள
காட்டு மானினின் பிணைகள் மீட்டினோர்-வஞ்சக்
கள்ளனவனை புள்ளிஸ்ஸலா மாக்கினோர்
காக்கக்கடவுள்தன் கிருபையா லெனைக்
காத்து ரட்சித்த காஷமாநபி. உள்ள
போதங்கள்மிகு ஞானக் கோடியே-நல்ல
பொற்கமலத்திற் கூடியே
பூபதியில் நெயினா மதுவை யாளவே
பொற்பதந் தரும் கற்பக நபி. உள்ள

பல்லவி.

யானபியே யானபியே எங்களிற சூல்நபியே.

அநுபல்லவி.

வாஞ்சு மதியழைத்த மக்காநகர் தீன்தழைத்த
மக்காநகர் தீன்தழைத்த மக்காநகர் தீன்தழைத்த. யானபி

சரணங்கள்.

வாசம்புகழ் நாயகரே தேசம்புகழ் தாயகரே
யாசகமில் லாதகாசிம் தாவலிமிர்ற சூல்நபியே. யானபி
சந்தரங் குடைபிடிக்கச் சுந்தர முகந்துலங்க
கந்துகமீதில்வரும் காவலிமிர்ற சூல்நபியே. யானபி
மஞ்சுதவழ் சோலைசூழும் மாமதினா மீதில்வாழும்
வஞ்சியாமி னார்மகவே கெஞ்சும் நெயினா மதுவையாளும்.

இன்னிசை.

அல்லாவின் றூதர் அருமறுற்ற சூல்நபியே
பெருமான் நபிக்குப் பெருமையுள பேரரசே
சிறியேன் பாடுங்கவிக்குச் சிறப்பாக முன்னடத்தும்
குருவாம் குத்புக்கெல்லாம் குருமுகையதீ னாண்டகையே.

" கானகத்தில் யானைக்கூட்ட ", என்றவர்னமெட்டு.

பல்லவி.

மையல்மிக மீறுதடி மன்னரொலி பாதந்தேடி.

அநுபல்லவி.

கையுல் கைய்யு மானயிறை துய்யவ னபியின்பேரர்
வையகத்திற் றூதித்த செய்யது முகையதீன்மேல். மை

சரணங்கள்.

மங்கை விருத்தைமகன் வாரியில் முங்கிமரிக்க
அங்கே வரவழைத்த அப்துல்காத ரொலிமேல். மைய
மாதாப மானநபி வல்லோன்மிகு ரூஜிக்கேக
வனசப் பாதம்புயத்தில் தாங்குமுகைய தீன்மேல். மைய
பூஞ்சோலை சூழும்ஜெயி லானிற் பிறந்தோரே
வாஞ்சையுடன் பாடும்நெயினா மதுக்கருட் செய்வீரே. மை

நபிநாயகர் பதம் முற்றிற்று.

———

பழையகாயல்

மூசா ஒலிபேரிற் பதம்.

கலித்துறை.

சீர்கொண்ட சிங்கம்நன் முக்காமதீனத்தைச் சேர்ந்தசிங்கம்
பேர்கொண்ட சிங்கம் பெரியோன் அளித்திற் பிறந்தசிங்கம்
கார்கொண்ட சிங்க முயர்பண்டி காயலிற் சேர்ந்தசிங்கம்
நேர்கொண்ட சிங்கம் மூசா ஒலிகை னிறைசிங்கமே.

(ஆசிக்கா அமெரிக்கா என்றவர்னமெட்டு.)

தேசமெல்லாம் வாசஞ்சாயுந் தென்காயல் தன்னில்வாழும்
செய்யதுமூசா ஒலியாமெடி-வஞ்சி
தீவினைய கற்றுமொலி தாமெடி. தேச

சென்னையி னிராஜதானி ஸ்ரீவைகுண் டப்டிவிஷன்
சேர்ந்த பழையகாயலாமெடி-அதில்
தீரன்மூசம் மதும்மாய்த்தின் தானெடி. தேச

கன்னியே பாலகனில்லா தெண்ணியே கருணையுள்ளான்
வென்றிசேர்மூசாஒலியைத் தன்னியே-ஒரு
இவ்வபாலகன்பெற வெண்ணியே. தேச

வந்தவர்க் கருள்கொடுத்த வித்தைசேர்மூசாஒலியை
வரிசையா யேற்றிமிகப் போற்றியே-வஞ்சி
பிரியத்துடன் மன்றாடக் கூட்டியே. தேச

கெட்டிமேனோர்க்கு கற்பதவி மெத்தக்கி டைக்கும்படி
கிருபை யுடனே துஆச் செய்வீரே-ஒலி
கருணை மிகக்கூர்ந்து ஆள்வாரே. தேச

ஆறுமென்று சொல்லுரைப்ப யேழைகளைக் காப்பதற்கு
ஆதரவே றொன்றுமிக இல்லையே-ஒலி
பாதுகாம லைப்பதற்கிதை யன்றியே. தேச

காடியே ஒருவன் வந்து தேடியே கந்தூரி செய்யக்
கோடியே கபடமித வெண்ணியே-ஒலி
தேடியே நயனமறை பண்ணியே. தேச

இன்னுமொருவன்வந்து இறைஞ்சிப் பதனும்பண்ண
இருநாக மேவிகிட்ட நாதாம்-வஞ்சி
யேகாந்த மானவொலி நேராம். தேச

என்ன சொல்வேன் காயல்நகர் பள்ளியறைதக் கட்டுவோர்க்கு
என்ன நலங்கிடைக்குமென்று சொல்லடி-இறை
ஏகன் சுவனப்பதி யமெடி. தேச

இப்படி யருண்மிகுத்த நற்புகழ் மூசாஒலியின
அற்புதப் புதுமைதினைத் தோணுதே-காணும்
எப்பவும் நெஞ்சினுமறை யானவே. தேச

(பார் பார் பாருமெந்தன் கோலம் என்றவர்ணமெட்டு)

பல்லவி.

சேயனெனையாளும் செய்கு மூசாஒலியே.

அநுபல்லவி.

மாயத்துனியாவின் வரமதா பெற்றவரே
சேரும் சிறியேனிடம் ஆ ஆ. சேய

சரணங்கள்.

பாரிற் சிறந்த பதிகாயல் நன்னகர்
வாழு மூசா ஒலியே ஆ ஆ. சேய
கன்ன லறபு நகர் கண்மணி யெனும் நேசர்
மன்னர் மூசா ஒலியே ஆ ஆ. சேய
ஏழைக் கிரக்கம்வீ சென்றுயர் தீர்த்திடுவீர்
வெவ்வை நெஞ்சினு முகமத் ஆ ஆ. சேய

(இது பாவமோ, என்றவர்ணமெட்டு.)

பல்லவி.

கருணை நாதாவே கடைக் கண்ணால் பாரீரோ-என்
காத்திம் ஹூபில் ருத்திபான காமிலொலியே.

அநுபல்லவி.

வருண பீதிஙிற் றருணமாக வந்தாளும் நாயகா—என்
கல்பால் நவின்ற கவலை தீர்க்கும் காயலொலியே
சாரி கம பம பம சரி சரி சனுதா சரிசப் பசனுக
மம்ம மனுக கக்க கமகரி. கருணை

சரணங்கள்.

கால காலமு மருகூலந் தேடுதே—என்
கருத்தி லுகந்த அன்புமிகத் ததிந்தாத் தேடுதே
சாரி கம பம பம சரி சரி சனுதா சரிசப் பசனுக
மம்ம மனுக கக்க கமகரி. கருணை

எங்கும் பொங்குமே பிரசங்க மானோரே—என்
இருதய முனைதவ முமனுரை நவிலும் நாதாவே
சரிகம பம பம சரி சரி சனுதா சரிசப் பசனுத
மம்ம மனுத கக்க கமகரி. கருணை

காரும் பாருமே என் கவலை தீரும்—என்
கருணைக்கட லானவள்ளல் காத்திமொலியே
சாரிகம பம பம சரி சரி சனுகா சரிசப் பசனுத
மம்ம மனுத கக்க கமகரி. கருணை

பாரும் பாருமே திருபக்த ஒலியே—இந்த
பையல் நெயினு மதவைப ளும் பரக்ப முசா ஒலியே
சாரிகம பம பம சரி சரி சனுதா சரிசப் பசனுத
மம்ம மனுத கக்க கமக... கருணை

(சீரார் சுனை...ல் வாழுமென்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

தாருங் கிருபை கண்ணால் பாருமுசா ஒலியே.

அநுபல்லவி.

காருங் கிருபையுடன் காயல்நன் னகர் வாழும்
காத்தி யென்னும் வந்த கருணை முசா ஒலியே. தாரும்

அங்கே அறபு நாடுத் தங்கள் குறைசிக் குலம்
அன்புடன் ஜனித்த எங்கள் முசா ஒலியே. தாரும்

ஆலுந் செறியுங்காவும் ஆன தென்னை மரமும்
அன்பிற் குறையோன்கொய்ய அவன்றன் விழிமறைத்தீர். தாரும்

கலக்யாணம் தானறியான் கவிகளைப் பார்த்துணரும்
தயங்கு நெயினுமது தானவன் பிணிதீர. தாரும்

(மங்கையார வல்லியவள், என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பேர்பெருகு மறபு நகர் பிறந்து வந்தோமீரே—புகழ்
பெருகும் காயல்மா நகரில் வாழுமொலியே.

அநுபல்லவி.

பார்புகழ் மக்காமதீனு வாழு மிறசூல் நபியே
பார்த்திப ராகவந்த காத்திமு சாஒலியே. பேர்

அந்தமா மதினாபதி யிருந்து வந்தோரே-புன
நாரண பிபுறுவி மொழிகூட வந்தோரே
சந்ததமாய் வந்தவுடன் சமர்கள் செய்தோரே-வெகு
சாதுரி[illegible]ான காயல் வாழுமொலியே.
விக்ரம பாண்டியன்கூட பொருக்கவே சமர்கள் செய்தீர்
அக்கால மேதொடுத்து இக்கால மிதுவரை. பேர்

வானோர் புகழ்ந்தா [illegible]ன்று [illegible]திக்கப் பெற்றீரே-உங்கள்
வனசமலர்ப் பாதங்[illegible]தேடி வருந்துறோமையா
தேசம் விசுவாசரான தி[illegible]ய கிருபாகரா-மிகச்
செந்நெல் விளையுங் காயல் நகர் வாழு மொலியே
விண்ணினிற் றங்களிருக்க மண்ணினிற் பெருநாள் வந்து
தேங்கினிற் காணைக் கொப்பத் [illegible]ங்கியவர் கல்மறைய. பேர்

காளைமார் சிலர்கள் வந்து கந்தூரி செய்யவே-தங்கள்
கருமத்துத் தெரியாமல் பகடி பண்ணவே
கோழையுடன் வாழ்ந்தோர்க்கு கி[illegible] செய்தோரே-மிக்க
குவலயத்திற் படும் நெய்னா மதா[illegible]வ மானுமே.
வையக மெல்லாம் புகழ வந்த தயாபரரே
இன்பமுடன் காயல்நகர் அன்புட னடங்கினீரே. [illegible]ர்

(மதினா புரியென்ற வர்ண மெட்டு.)

பல்லவி.

காணே வின்னம் பானே கருணை முசா ஒலியே.

அநுபல்லவி.

கோனே விறைபோ னமைத்த குறைசி வமிசனிலே
தானே அறபு நாட்டிற் றுதித்த நாயகமே. காணே

சரணங்கள்.

அறபு நாட்டிலே பிறந்து அறபாவுரை சொல் பகர்ந்து
மிகுதிதென் காயல்வந்த மேன்மை முசா ஒலியே. காணே

குறைவில்லா வமிசத்திற் கோமானபி கிளைவிற்
மன்னராய் வந்துதித்த வரிசை முசா ஒலியே. காணே

வையமெல்லாஞ் சீர்த்திபெற்று வரிசையாக வந்தோரே
பையல் செய்னு மதாவின் பாவம் பிணிகள் தீர்க்க. காணே

(மவுலூது ஓதுமிப்போதே என்ற வர்னமெட்டு.)

பல்லவி.

கண்ணின் மணியான சீவர்-எங்கள்
காயல்நகர் வாழும் காமிலொலியே.

அநுபல்லவி.

விண்ணின்மதி போன்ற கூட்டம்-தங்கள்
மேலான தருகாவைத் தேடித் தாளுட்டம். கண்ணின்

சரணங்கள்.

கன்னல்செறி வயல்சூழும்-ஈங்கள்
காயல்நக ரினில்வாழு மொலியே
விண்ணினிற் றங்கள் தாரகா-இறை
வானோர் புகழ்ந்தேத்தும் வன்னவொலியே. கண்ணின்
வானோர் புகழ்ந்தேத்தும் நாதா-உங்கள்
வனச மலர்ப்பதம் தேடிநீரும் நாடி
தானே விடுத்து ஆவிரந்து-தங்கள்
தருகாவில் நின்றிடும் பாவிக்கு ஏற்றம். கண்ணின்
இன்னிலத் துள்ளோர்கள் போற்றத்-தங்கள்
திருநாமம் உலகெல்லாம் புகழ்ந்து துதிக்க
பையல் செயினுமது லெப்பையவன்
பாடலுக்கு வரந்தரு மொலியே. கண்ணின்

(கானகத்தில் யானைவந்து என்ற வர்னமெட்டு.)

பல்லவி.

என்னமோ வரக்காணமே அன்னமே நானென்ன செய்வேன்.

அநுபல்லவி.

இன்னிலத் துள்ளோர்கள் போற்றும்
மன்னவர் மூசா ஒலியை. என்னமோ

சரணங்கள்.

ஆசைமிகத் தேடுதையா அங்கமெல்லாம் வாடுதையா
நேச மொழிதவறு செயினுமு சாஒலியே. என்னமோ
முத்துரத்னம் பாடுதையா மொழிம ரத்னம் தேடுதையா
முன்னே வரங்கள் பெற்ற நன்னயமு சாஒலியே. என்னமோ
பாடினேன் பையல் செயினுமது வேனும் லெப்பை
பாவம் பிணிகள் தீர்க்கும் பார்த்திபர் மூசா ஒலியே. என்னமோ

பல்லவி.

வாழ் மனதுக் கென்ன செய்குவேன்-முசா ஒலியே
வாழ் மனதுக் கென்ன செய்குவேன்.

அநுபல்லவி.

வாழ்மனதுக் கென்னசெய்குவேன் வள்ளல்யாமு சாஒலியே
தாழ்வென் றில்லாம லெங்களைத் தற்காக்கும் நாதரேகாண். வாழ்

சரணங்கள்

செம்பொன்மணி தங்கிவாழும் காயல்மா நகரத்தில்
செய்பிதாக வந்தாளும் வள்ளல்யா முசா ஒலியே. வாழ்

எங்கள் காயல் மாநகரில் தங்கும் பலாயனாக
தேகிப்பறத் தோடச்செய்வீர் அன்னல்யாமு சாஒலியே. வாழ்

பயல்கெவி ஞமதுவின் பாவம் பிணி தீர்த்தருள்வீர்
பாவம்பிணி-தீர்த்திவைப்பீர் பாக்கியர்மு சாஒலியே. வாழ்

(நேசந்தருமெங்கள் விசுவாசரடி என்றவர்னமெட்டு.)

பல்லவி.

கஞ்சமலர்ப்பாதந் தரவேணுமடி-எங்கள்
காயில் முசாஒலி நீதரடி

அநுபல்லவி.

துஞ்சும்பொழில் சூழ்மதிள் துங்கசவியும்மதினிற்
இங்கரெனையாளுமகராஜரெடி. கஞ்ச

சரணங்கள்.

கத்தனருள்சிறந்த நாதரெடி-இந்தக்
காயல் நகர்தன்னையாளும் நீதரெடி
காணமற்றுணைப் போனவனைத் திரும்ப
மீட்டி வரவழைத்த மெய்பரடி. கஞ்ச

அல்லும் பகலும் அவராசையெடி-வஞ்சி
அடிக்கடியேபெருகி உருகுதெடி
கல்லுங் கரைந்திடுமே காரணமிருந்தவெங்கள்
காயல் முசாஒலி நீதரெடி. கஞ்ச

ஏழைமீதிலிரங்கி யாள்வாரெடி-புக
ழெங்கும்பரவச்செய்யும் நீதரெடி
காளையொருவன்வந்து களவுமிகவுஞ்செய்ய
கருநாக மேவிவிட்ட நாதரெடி. கஞ்ச

வையகஞ்சிறந்த எங்கள் நாதரேடி-சொன்ன
வாக்குத் தவறாதெங்கள் நீதரேடி
மையல் கெவினுமனுவைப் பார்த்திரங்கவேணு மிப்போ
தையலர்க்குதவிசெய்யுந் தருமரேடி. கஞ்ச

(இங்கிலீஷ்-நோட்டு)

பல்லவி.

வந்தேன் வந்தேன் கண்மணியே
வருமை போக வென்னையாளும்.

அநுபல்லவி.

சந்தமிகும் கமழோளியே தாயிலென்னுமு சாலுவியே. வந்

சரணங்கள்.

துதிக்குமையல் துயரறவே
கதிக்குமாவென வருங்குருவே
சதி யற கெதி பெறவே
சாலியென்னுமு சாலுவியே. வந்தேன்

காதங் கமழும் சமழ்துப்பா
பீதங் குடைநிழல் செய்துப்பா
வேதம் புகழும் காதலரே
வேண்டுங் கிருபை தாருமொவி. வந்தேன்

மையல் கெவினு மனுவெல்லை
பொய்யுந் துன்பம்போக்கிடவே
பார்த்தருள்வீர் காத்தருள்வீர்
பாத்திபர்மு சாலுவியே. வந்தேன்

பல்லவி.

மனக்கவலை தீர்க்க வேணுமே-லுவியே எங்கள்
மனக்கவலை தீர்க்க வேணுமே.

அநுபல்லவி.

மனக்கவலை தன்னைத் தீரும் மயக்கமெ லென்னைக்காரும்
எனக்குதவி அருள்தாரும் எங்கள்மு சாலுவியே. மனக்

சரணங்கள்

நெஞ்சகம் முருகி வாடுதே-நிதமுமெங்கள்
அஞ்சமலப் பாதந்தேடுதே
என்செய்வே னென்றெண்ணிவாடுதே-ஏழைமனது
சஞ்சலப்பட் டுய்வைதாடுதே

அஞ்ச லஞ்ச லென்றென்னையாளும் மிஞ்சமொழி வாசகரே
தஞ்சமுங்கள் பாதம் தரவேணு முசாஒலியே மனக்

எங்கும்பிர சங்கமானீரே-எல்லாரும்புக
ழேகாந்தமாக வந்தோரே
பொங்கும்புக ழுடையோரே-பரவமெ[illegible]
போர ரசான நிதரே.

அக்கிரமம் பேசிவந்த விக்கிரமப் பாண்டியனை
வெட்டிக் கருவறுத்த வேந்தர்மு சாஒலியே. மனக்

அற்ற நிலையில் நின்றோரே-சுமமூர்த்தி
நற்றவம் நிறைந்தோரே
அண்டர்துதி சிறந்தோரே-முசாஒலி
அண்ணாலெனவும் வந்தோரே

வையமெல்லாம் புகழும் தொய்யல் கா[illegible]நகரிற்
பையல் நெயினுமது வைப்பார்த்திரங்கவேணும். மனக்

(கண்ணே உன்னையான் தேடி என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

கருணைநாதா யிப்போது காக்கக் கடவது
கண்ணின்மணி யானவெங்கள் நிண்ணயமு சாஒலியே.

அநுபல்லவி.

வருணமீதி லெந்தனையும் வாகுபெறவே வந்தாளும்
தருணமிது வெனக்காதாரம் தரவேணு முங்களுபகாரம். கருணை

சரணங்கள்.

காளைமார்கள் வந்ததிலே களவொருத்தன் செய்ததிலே
தாழ்மையோடு எந்தனிலே தயவு செய்வீ ருகந்தனிலே. கருணை

மறையின் வேதம் தனைவிட்டு மார்க்கமறியா மதிகெட்டு
வாம்பாதக் தனைத்தொட்டு வறுமைபோக எனைவிட்டு. கருணை

ஓ[illegible]ம்ம டயிர்தானும் ஓடிவிட்டுத் தர்ன்மறையும்
ஆகமுட னிருக்குமட்டும் அடிமைநெயின மதையாளும். கருணை

(வையாபுரி முருகையனும் என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

மைபல்மிஞ்சி யுள்ளந்தேடுதே முசாஒலி நாயகமே.

அநுபல்லவி.

வையஞ் சிறந்தகாயல் மாநகரத்தில் வாழுமுசா ஒலியே
வாழு முசா ஒலியே என்னைக்காரு முசாஒலியே. மையல்

சரணங்கள்.

சந்தத் தமிழ்நகை சுந்தரப் பொற்பாதா-ஏ
காரண ஆரண பூரண மானரு
சாஒலி நாயகமே. மையல்

தேங்கு மீதிலேவிப் பாங்காகச் சொய்து வீச-ஏ
திருவிழி விருமேனி மனோரந்தோளி அறைந்தருச்
செய்யுமுசாஒலியே மையல்

ஏழைநீதி யிரங்கியாளும் நவநீதரே-ஏ
இப்போது பொற்பாதம் நடப்பாக எப்போதுந்
தந்தருளு முசா ஒலியே மையல்

வருசியர் துயர்நீக்கும் இன்சொல் மொழிவாய்க்கும்-ஏ
வந்தருள் தந்தென்னை இந்தவேளை துயர்
நீக்கு முசாஒலியே. மையல்

காயல்மா நகரத்திற் காளையொருவன் வந்து-ஏ
காணும் ருனகப் போனவனை தோண
மீட்டு முசாஒலியே. மையல்

சுத்த னருட்சிறந்த நற்றவ மாநிறைந்த-ஏ
காக்குமே பார்க்குமே பார்க்குமே துயர்
தீர்க்குமுசா ஒலியே. மையல்

ஓதிடும் செய்யதமு னையதின் மீதிரங்கி-ஏ
உங்களின் பொற்பாதந் தங்கி ரட்சித்தென்னை
யாளுமுசா ஒலியே. மையல்

பல்லவி.

மோக மையலாகினேன் முசாவுஒலி நாயகமே.

அநுபல்லவி.

யோக நிஷ்டைபுரிந்த ஏகமய மாகநின்ற
இறைபோ னருட்சிறந்த எங்கள் முசா ஒலியே மோக

சரணங்கள்.

அற்ற நிலையில் நின்ற நற்றவமாய் நிறைந்த
அண்டர் துதி சிறந்த அண்ணல் முசா ஒலியே. மோக

கம்பத்துக் குள்ளே நின்ற இனபத்துட னங்கையைக்
கண்டு தெரிசித்திடக் கருணை முசாஒலியே. மோக

வட்ட வடிவில்நின்ற தட்டுப் பரியிற் சென்ற
வல்லோனருட்சிறந்த வரிசை முசா ஒலியே. மோக
அங்கம் வாசம் நிறைந்த தங்கம் வடிவுறைந்த
ஆலநபியருளை யருந்தும் முசாஒலியே. மோக
கன்னல் கமுகுசூழும் தென்னமரச்சோலையில்
காயல்மா நகரில்வாழ் ஹோ[illegible]ில் முசாஒலியே. மோக
ஏழை செய்யதுமுகைய தீனவன் ருஜுவுரைத்த
இன்பக்கவி கேட்போர்க்கு இரங்கு முசாஒலியே. மோக

வெண்பா.

தேசம்புகழ்ந்தோர் தென்காயல் தன்னில்வாழ்
தேசுமுசா[illegible]மற் சிந்துரைக்க-மாசில்
அருட்புரியும்வல்ல ஆதிஇறையோனே
கருணைபுரிந் தாளவிது காப்பு.

(காவடிச் சிந்து வர்ணமெட்டு.)

காயல்நகரொலிநாதர் புஷ்பப்பாதர் திருப்போதர்-என்னைக்
காத்துரட்சித்தருள் நீதக்காவல்
இப்படியாச்சுதே தப்பிதமாகவே
இத்தருணங் காப பீரே-தங்கள்
முத்தியைத் தந்தருள் வீரே.

அற்ற நிலையில் நின்றோரே மன்றோரே சென்றோரே-எங்கள்
தீன்னால் துதிசிறந் தோரே-காய
லாதர வாகவந் தீருமுசாஒலி
அன்புசெய் யாதவன் மறைந்தே-ஒலி
முன்பு வரத்திறந் தறந்தே.

வஞ்சியர் தந்துயர்நீக்கும் ஒளிவாய்க்கும் எளியோர்க்கும்-எ
வந்தனன் பங்கிளைப் போக்கும்-பொல்லா
வண்டத்தனமெனுஞ் சண்டித்தனம் பண்ணும்
வம்பரி லாக்காதி றென்னை-நாளும்
தம்பமாய் நம்பினே னுன்னை.

ஏதமறியாத பாவி யும்மைமேவி யெனதாவி-நாளும்
எண்ணாக் கவனமற் கூவி-யிந்த
ஏழைக்கிரங்கியிவ் வேளையறிந்துதா
னெப்போதும் னம்பினே னும்மை-நிலை
தப்பாமற் காத்திடு மெம்மை.

மன்னர்முகம்மதி [illegible] கபியிறசூல் கபியிறசூல்-ஒலி
மனுமினிற் கண்டவ[illegible] ரென்பால் சொலும்
மன்னவரே [illegible]ன்னவனைக் காரும்
வள்ளல் மு[illegible]ஒலி நீரே-அன்
புள்ளகி[illegible] செய் வீரே.

[illegible]பிசாகசன் மீதுதி ஒருபகுதி பார்க்கத்தகுதி-ஒலி
கான்மாட்டிற் கூடியே[illegible] தொகுதி-எ
சுக்கராவுன்பதந் தந்திடவந்தெனக்
குய்ய வரந்தரு வீரே-எனை
செய்குமு சாஒலி நீரே.

மன்னர் பணிந்திடு முரவே சம்[illegible]புகழ்தரவே-எ
மாட்சிமைதங்கிய [illegible]ரவே-எங்கள்
மாதவ நீதரே வாதனை தீர்த்தருள்
வள்ளல் முகசாஒலி நீரோ-எனை
உள்ளிமகிழ்ந்து காப் பீரே.

பாலை நூசையாற் பின்னி பவம்பன்னி மனக்கன்னி தவம்
பண்[illegible]திருந்ததை மன்னி-பொல்லாப்
பா[illegible]கா[illegible]லக்கடந் தேவக்கலையேற்றும்
பா[illegible]க்யமு சாஒலி நீரே-சி
லாக்கியமுண் டாக்கிவைப் பீரே.

கத்தனருட்கிறந்தோரே துறந்தோரேகிறைந்[illegible]ரே-என்னைக்
காக்குமு சாஒலி நீ[illegible]ரே-இ[illegible]தக்
காகினியில்விசு வாசியுன்னைப்போற்றும்
காதரி ராவுத்தன் பேரன்-நல்ல
மாதரியாக்கிடுக் கிரான்.

முசாஒலி பேரில் பதம் முற்றிற்று.

———

காயல்மா நகரம்.

நெயினாமுசாஒலி அவர்கள்பேரில்பதம்.

பல்லவி.

கந்தங்கமழ் பாதமலர் தாருமையா — ஏழை
பெர்தன் துயர் தீருமுகம் பாருமையா.

அநுபல்லவி.

இந்தகம் வந்துவாழும் இன்பமுள்ள காயலூரில்
வங்கண வழிமறைத்த எங்கள்நெயி னாரொலியே. கந்த

சரணங்கள்.

குப்ப கு[illegible]பலாகத்தில வர்த்தகர்கள் — நாட்டி.
உப்புப் பொதி யேத்திவரக் கண்டதினால்
செப்புமொழி யென்னடப்பா தப்பாமல் பொதியென்றான்
அப்படியே செய்தருளும் எங்கள்நெயி னாரொலியே. கந்த

மங்கையர்கள் கூடிவழி போகையிலே—கள்ளர்
பங்கஞ் செய்ய நாடிவரும் வேளையிலே
அங்கத்தடு மாறியழு தோடித்தங்கள் காலில்வீழ
வங்கண வழிமறைத்த எங்கள்நெயி னா[illegible]லியே. கந்த

சிந்தை மகிழ்ந்து மிகப் புகழுகிறேன்—பாரிற்
சிறியேன்மு கைபதீன் குப்பை பாலிகிறேன்
வஞ்சகமி[illegible]லாமல்கம்பும் கெஞ்சநெயி னைதாக்கு
[illegible]கொடுத்த தருண்டு[illegible] வள்ளல்நெயி னாரொலியே. கந்த

நாயகிய[illegible]ள்பேரில் கும்மி.

மேன்மையாந் தீனின் மார்க்கம் விளங்கவில் வுலகந் தன்னில்
மான்மையூ நாச்சி யாரை மனக்கிடு பிறகு லென்னும்
தேன்மலர் கமிபொ ருட்டாற் செந்தமிழ்க் கும்மி பாடக்
கான்மலர் புகழுமெங்கள் கந்தனே துணைச்செய் வாயே.

கும்மி.

கும்மியடி பெண்ணே கும்மியடி.—குரு
பாதங்காணவே கும்மியடி
எம்மை யாளுகிறை வனருளை
நாடிக்கும்மி யடியுங்கடி.

கும்மி

வாழும் புவிகள் படைத்தாரும்—அந்த
   வல்ல விறையவன் றன்றாதர்
தீன்முகம்மது நன்நபி பாதத்தைத்
   தேடிக் கும்மி யடியுங்கடி. கும்மி

நாடு மிறையவன் றன்றாதர்—ங்கள்
   நபிநாயக முகம்மது நன்னபியின்
நாலு இமாம்களும் நாற்பத்திராயிரம்
   வல்லசகாபிகளைப் போற்றுங்கடி. கும்மி

வள்ளல் முகம்மது தன்மருகர்—அவர்
   மற்றுமி மாமுக்கு முந்தினவர்
தெள்ளு மறையபூ பக்கர் சித்தி...
   தேடிக் கும்மி யடியுங்கடி. கும்மி

முன்னுள் செய்த வினைதீர்க்கும்—நபிநாயகர்
   முகம்மது நன்னபி தன்மருகர்
மன்னருமறுகத் தாபிருகை
   வாழ்த்திக் கும்மி யடியுங்கடி. கும்மி

வேதம் புகழுங் கமழ்துய்யோர்—அவர்
   வேண்டும் புருக்கான் கோர்வை செய்தார்
நாதர் புகழு மிமாமுது மானை
   நாடிக் கும்மி யடியுங்கடி. கும்மி

வாளுக் கரசு புவிக்கரசு—கொற்க
   வாழ்வுக் கரசு நபியிறசூல்
தீனுக் குரிய அருசுப்புலியாரைத்
   தேடிக் கும்மி யடியுங்கடி. கும்மி

சங்கை நாகூ ரிருப்பவராம்—அவ
   ரெங்கும் பெரிய மீறுவாம்
தங்கச்சிம் மாதன மேறும் ஷாகுல்கமி
   தொலிமை நிதமும் போற்றுங்கடி. கும்மி

ஏறு வாடி யிருப்பவராம்—அவ
   ரெங்கும் பயிர்தீன் விளைத்தவராம்
காருமிபுறுஹி மொலியின் பாதத்தைக்
   கருதிக் கும்மி யடியுங்கடி. கும்மி

நாவலர் போற்றிடும் நாகரத்னம்—காயல்
நகரில் வாழ்ந்திடும் சிவரத்னம்
சிவ ரத்தின மாணகவி ஞனை[illegible]
தேடிக் கும்மி யடியுங்கடி. கும்மி

வாகுமுத் திப்[illegible]டை ஆய்பவ[illegible]—எங்கள்
மாமுஹற் பெரிய நாயக ராம்
சேகு தாவூது பாதமதை நீங்கள்
செழிப்புடனே புகழுங்கடி. கும்மி

காஹிர் நகரி லமைந்தவராம் எங்கும்
காரண மாமொலி யுல்லாவாம்
அப்பா [illegible]க் தில்லா ஒலியை
அ[illegible]பாய் நீங்களும் போற்றுங்கடி. கும்மி

பூரண புவா னர்க்கரசர்—அவர்
ராவணம் ராமேஸ் புரம் ஆள்வர்
நாயக ரான முத்துவாப் பாபதம்
நாடிக் கும்மி யடியுங்கடி. கும்மி

லைதக்கா சா கிப்பொலி நாயகராம்—அவ[illegible]
ரெக்கா லம்புகழ் வாசக ராம்
ஹக்கா நபிபேர ராகுமெக்கள் செய்
கப்தல் காதரை யேற்றுங்கடி. கும்மி

[illegible]ஷ்ட[illegible]ைம் விக்ரம பாண்டியனைக்—கொன்று
சிஷ்ட[illegible]ப் ப[illegible]கரும் ராஜகராம்
அவ[illegible] லெட்சப[illegible] வசசம்பொ ருந்தும்
பீமாபகஸ் ஸா[illegible]யைப் போற்றுங்கடி. கும்மி

ஆற்றூர் நகர் தன்னை யாள்பவராம்—அவர்
அன்னைல் குருசானி ஹள்ளவராம்
தேர்ச்சை மிகவுள்ள அப்பா சொலியைத்
தேடிக் கும்மி யடியுங்கடி. கும்மி

கண்ணுண் மணியான நாயகராம்—எங்கள்
காயல் நகர்தன்னை யாள்பவராம்
என்னும் நெய்னா முசாஒலி பாதத்தை
ஏற்றிக் கும்மி யடியுங்கடி. கும்மி

இன்னஞ் சிறியே னடியேனும்—கொஞ்சம்
  தெரிந்த வரையிற் சொல்லுகிறேன்
என்ன குற்றமிருந் தாலும் பொறுத்
  திரங்கி யாளும் பெரியோரே. கும்மி

சோலைக் கரும்பே வனக்கிளியே—பசுந்
  தோகை மயிலே கருங்குயிலே
காயல் நகர்வாழும் வள்ளல்முசாலுவி
  காரணஞ் சொல்கிறேன் கேளுங்கடி. கும்மி

காயல் நகரிற் பிறந்தவராம்—அவர்
  காயல் நகரி லிறந்தவராம்
பூபன் முகம்மது மையதீனுக்குத் தவ
  புத்திர னில்லையென் றக்குறையை. கும்மி

உந்த னிடவிற் சொல்லி கொழும்புக்குப்—போக
  உத்தேசம் பால னெனக்குத் தந்தால்
வந்துமு சாலுவி தங்கள் தருகாவில்
  மனைமுகங் கட்டி முடித்து வைப்பேன். கும்மி

என்றுமே நேர்ச்சைகள் நேர்ந்துக்கொண்டு—ஒலி
  யிடத்தில் வந்து ஆவிரந்தார்
அன்றே அவர்கள் கிருபையினற் றஆ
  ஆதி யிறையவன் கபூல் செய்து. கும்மி

பிந்திய காலத்தில் மைந்த னிக்கவே
  பெருங்கூழ லிப்பிச்சை யென்றவிதான்
சந்ததி யானமு கம்மது மைந்தன்
  தானே வளர்த்தாரே மைந்தனையும். கும்மி

மைந்தன் பிறந்ததோர் பத்தாம் வருடம்
  மாதாபி தாவுமே என்ன செய்தார்
வந்தித்து நேர்ந்த நேர்த்திக் கடத்துக்கு
  மனைமு ரண்டுமே கட்டி வைத்தார். கும்மி

மிக்கவே காரண மின்னமுண்டு—அதை
  விளம்பக் கேளடி தோழியரே
தக்க மனித னொருவன் கபடமாய்த்
  தானென்னைக் கண்டந்த வேளையிலே. கும்மி

மன்னர்மு சாலி தங்களுக்கு—மிக
மனதுட் கோபமு முண்டாகி
என்னவி தத்தாலோ வழிதெரியாமல்
ஏங்கித் திரிந்தானே அம்மனிதன். கும்மி

புத்தி மயங்கிப் போனதாலே—சாகிபு
புனைமயி லிப்பேர் தெரிந்த தென்று
மெத்தப் புகழ்ந்துமு சாலி பாதத்தை
வேண்டி வழிகடந் தேகினனே. கும்மி

வானின் மதியை யிரவினிலே—வர
வழைத்த மாநபி யைப்புகழ்ந்து
ஞான மணியாமு சாலி காரணம்
நவிலக் கேளடி தோழியரே. கும்மி

தென்னம ரத்தினிற் றுனொருவன்—ஏறித்
தேங்கா யதனைத் திருடுகையில்
என்ன திருடநீ யிங்குவந் தாயென்று
எங்கள்மு சாலி தான்பார்த்தே. கும்மி

நன்றாகன் றந்தனுக் கிந்தவேலை—யிப்போ
நாடியித் தேங்காய் பறித்தாயடா
என்றுமு சாலி சொல்லத் திருடனுக்
கிரண்டு கண்ணுண் மணிமறைய. கும்மி

மெத்தத் தயங்கி மதிமயங்கி—நான்
வினைத் தனஞ்செய்து போட்டே னென்று
கத்த னுதவியாற் செய்த களவுக்குக்
காணிக்கை பொன்றுக் கிரண்டு தாரேன். கும்மி

வந்ததி ருடனும் நேர்ச்சை நேர்ந்துக்—கொண்டு
வள்ள லவர்களைப் போற்றி செய்ய
அந்த நிமிஷ மொலியின் பறக்கத்தா
லவனுக் கக்கந்து லங்கிடவே. கும்மி

விண்டத்தில் வாழுஞ் செங்கதிரே—என்னை
வெளியி லாக்கிய வெண்கதிரே
உண்டென்ற பேருக் கொளிவி ளக்கேகாய
ஊருக்குத் தாண்டா மணிவிளக்கே. கும்மி

தோகையே யின்னொரு சாரணைக்கேள்—மிகச்
சுந்தர மாகிய சுந்தரியில்
[illegible]ாக வொருவன் களவாய் டிறைச்சியில்
வந்தின் கிருக்கக் கருநாகம். கும்மி

கண்டே அவனும் நடுநடுங்கி—என்னைக்
காப்பாற்ற வேண்டுமு சாஒலியே
[illegible]ன்டே னிவ்வேளை பிழைபொறுத் தெனையாள
வேனுமென் றந்தனைப் போற்றி செய்ய. கும்மி

அந்த நிமிஷக் கருநாகம்—மேனை த
யதி லிருந்தது கிழிசக்கி
வந்த வழிபோகத் தன்னுமே செய்த
வள்ள[illegible]மேற் கும்மியும் பாடுங்கடி. கும்மி

அஷ்டப் [illegible]சாசுகள் வந்திருக்க—ஒலி
கிஷ்ணை[illegible] புரியுமெம் மாண்டகையே
விட்டு வி[illegible]லவே யந்தாரந் தாருங்கள்
வேண்[illegible]மு சாஒலி தாயகமே. கும்மி

இப்படி[illegible]யாக அருள் மிகுந்தோ—சவ
செ[illegible]முசா ஒலி தன்பேரில்
தப்பாமற் சந்தம் வாழ்த்தியிப் பாடலைச்
சாற்றிக் கும்மி யடியுங்கடி. கும்மி

நம்மையா ளும்தயி தம்பொருட்டாற்—கவி
[illegible]லிலும் வெவ்வை கெயிக்[illegible]
செம்மை யாகவொத் தன்மைகொண் டேயிதைச்
சிமைக் மகிழ்ந்து படித்திடுங்கோ. கும்மி

கும்மிப்பாடல் முற்றிற்று.

120107

தாய்மகளேசல்.

கலிச்சந்த விருத்தம்.

முத்திலு தித்தமு ஹம்மதர் பாதம்
நித்தமு மென்னது நெஞ்சிலி ருத்தி
உத்தர வானவும் மாமக ளேசல்
இத்தல மீதி லியம்பிடு வாமே.

ஏசல் குறம்.

ஆதியிறை யோன்மக்கா வானதென்ன தாயே-அது
ஆலமெல்லாம் படைத்திரண மீவதினால் மகளே. 1

இரணமெது மனுவெதுஇன் சானெனுவாம் தாயே-அது
இகலோக வாழ்க்கையான இன்சானுவாம் மகளே. 2

இன்சானுக்கு முந்தினது எந்தஇன்சான் தாயே-அது
ஆதமைமண் ணாலமைத்த ததுமுதலாம் மகளே. 3

ஆதமுக்குப் பின்படைப்பு எந்தஇன்சான் தாயே-அது
அவர்கள்விலா வெலும்பொன்றை யுடைத்தலவோ மகளே. 4

ஹவ்வாஉம்மா பீவியைத்தான் படைத்ததேது தாயே-நபி
ஆதமுக்குக் காரிகையாச் சேர்த்தானடி மகளே. 5

சீதேவியைச் சேர்ந்தமுதற் செய்தியென்ன தாயே-அது
ஒருகுலில் நாற்பதுபேச யுற்பவித்தார் மகளே. 6

பெற்றதின்பின் னப்துல்முத்த லிபுபேச யெவர்தாயே-அது
உற்பனமாய் வந்துதித்த அப்துல்லாவாம் மகளே. 7

(அப்துல்லா)நெற்றியதில்முத்தொளிவாய்நின்றதாருதாயே-அது
ஆமினம்மா தான்பயந்த அண்ணல்நபி மகளே. 8

அண்ணல்நபி யும்மத்துக்கு அறிக்கையென்ன தாயே-அது
ஹக்குக்கஞ்சி யறிந்துதொழ வேணுமடி மகளே. 9

தொழாதவர்க்கு நரகமென்று சொன்னதென்ன தாயே-அது
நாலாம்வேதம் புறுக்கானுட வாக்கியமாம் மகளே. 10

உதித்ததென் றும்உணர்வதென் றும்சொன்னதென்னதாயே அது
உடையோன்செயல் ப்குத்தறிய முடியாதடி மகளே. 11

தொழுகையில்லா நரர்களுக்கு உணவுக்கென்ன தாயே-அது
நாய்க்குணவு தான்கொடுத்தால் நன்மையுண்டாம் மகளே; 12

விட்டுவிட்டுத் தொழுபவர்க்கு வேதனையென் தாயே-நரகிற்
கட்டுருட்டிக் கனவருத்தஞ் செய்வாரடி மகளே. 13

தொழுகையில்லா வுணவைத்தா ரப்போடென்றாய் தாயே-அச்
சுருதியான திதயீர் தொட்டுப் பார்க்கவில்லை மகளே. 14

தொழுகையைக் கேவலஞ்சொன்னோர்க்கென்னவருந்தாயே-நாளை
கழுதையாக்கிக் கடிவாளமிட் டிழுப்பாரடி மகளே. 15

தொழுகையில்லா வுடனேயிலைவைத்த தோழமைக்குத்தாயே-காலத்
தொழுகையதை முறியுமென்று கண்டேனடி மகளே. 16

தொழுகையில்லாதவ்வினைத்திலைக்குவிப் பாட்டலாமா தாயே-அது
சுருதியிது விலக்கலெனச் சொன்னாரடி மகளே. 17

தொழுகையில்லாச் சுவர்தொழுவத் தடக்கலாமா தாயே-அது
சுருதியிது விலக்கலெனச் சொன்னாரடி மகளே. 18

தொழுகையில்லான் பிணஞ்சுமந்து போகலாமோ தாயே-அது
சுருதியிது விலக்கலெனச் சொன்னாரடி மகளே. 19

சொல்லுகின்ற வருஷகோம்பு பிடிக்காவிட்டாற் றாயே-நரகில்
வல்லுடனே யனல்கொட்டி யெடுப்பாரடி மகளே. 20

களவிறுண்டு வெறுங்கோம்பாய்த் திரிபவர்க்குத் தாயே-நரகி
லுள்விருட்டு அறையிற் போட்டு எடுப்பாரடி மகளே. 21

சிறுபிள்ளைகள் பிடிக்குங்கோம்பு யாருக்கம்மா தாயே-அது
திருத்தகப்பன் தாயாருக்குச் சேருமடி மகளே. 22

சக்காத்து சதக்காத்துச் செய்யணுமோ தாயே-அதைத்
தவறவிட்டாற் கொடுரகம் வாய்க்குமடி மகளே. 23

பிறருடைமையெடுக்கவர்க்க பேருக்கென்ன தாயே-அவரைக்
கரடிசிங்கம் புலிகவோய் கடிக்குமடி மகளே. 24

எத்தீம்கள் வுடைமையெடுத் தவருக்கென்ன தாயே-அவருக்
குற்றசதை நெருப்பில்கரு கச்சுடுவார் மகளே. 25

முழுக்கறுக்கும்விதங்களெல்லாம்மொழிந்திடம்மா தாயே-அந்த
முழுக்கின்பற விரண்டெனவே மொழிந்தாரடி மகளே. 26

முழுக்கைவர்துக் கொண்டுதூங்கும் மூடர்க்கென்னதாயே-நீர்
வழுக்கறநா மலைநேற்றி வருத்தஞ்செய்வார் மகளே. 27

லாஇலாக இல்லல்லாகு திக்கிரென்ன தாயே-அந்த
நற்கலிமா ஐந்தெழுத்து உண்டாமடி மகளே. 28

காருமைந்தி டங்கணக்காய் ஊன்றவோர்க்குத்தாயே-சொன்ன
முழுக்கறுக்கும் விதங்களெல்லாந் தெரியுமடி மகளே. 29

அஞ்சுவன்னத் திரண்டுமஞ்ச ணனதென்ன தாயே-அது
அறமதென்றும் முஹம்மதென்றும் பிரித்ததுவாம் மகளே. 30

அஞ்செழுத்தி லிரண்டெழுத்தும் மூன்றெழுத்துந் தாயே-அக
அகரமெனும் உகரமெனும் வாசலடி மகளே. 31

வாசலென்று சொன்ன அந்த வாசலென்ன தாயே-இன்சான்
பஞ்சரனக் கோட்டையதைப் பார்த்தறியும் மகளே. 32

இவ்வெழுத்தை விலாகிக்காவல்காத்த லென்ன தாயே-அதி
அல்லவென்றும் சொல்விளக்கு அறியுமடி மகளே. 33

வட்டிவாங்கி வயிறுவளர்க்கும் வம்பருக்கென்ன தாயே-தங்கள்
வயிறுவீங்கி காலைமஹஷரில் வருந்துவார்கள் மகளே. 34

பொட்டப்படி கொண்டளக்கும் பேர்க்கென்ன தாயே-அவரைக்
கட்டிவிட்டு நெருப்பைக்கையில் காயவைப்பார் மகளே. 35

சூதுவிளை யாடும்பேர்க்குச் சொன்னதென்ன தாயே-அங்கு
வாதுபடுத் தொழில்நரகில் வாட்டிடுவார் மகளே. 36

வழக்கோரம் பேசுமந்த வம்பர்க்கென்ன தாயே-அந்த
வம்பர்வீட்டைப் பாழடையச் செய்வானடி மகளே. 37

களவுகன்னம் செய்பவர்க்குக் காவலென்ன தாயே-பளீரென்
றடித்துநாளை பாழறையிற் சேர்ப்[illegible] மகளே. 38

பொய்புரணி சொல்பவர்க்குக் குற்றமென்ன தாயே-நாளை
சுடுகோலால் மேனியெல்லாந் துளைப்பாரடி மகளே. 39

கோள்சொல்லுங் கோதையர்க்குக் கோலமென்ன தாயே-அங்கு
கொடியரவு நாளைவந்து கொல்லுமடி மகளே. 40

அசல்மாதரைக் கண்ணுற்றுப் பார்த்த ஆசைக்கென்ன தாயே-நரகில்
மசியவெந்த குறட்டால்மாட்டி வதைத்திடுப்பார் மகளே. 41

கணவன்சொல்லைக் கடந்திடுங்கழுதைக்கென்ன தாயே-அங்கு
நொணதொணென்ற நரகம் நாளை துரத்திவிடும் மகளே. 42

வாய்வம்புகள் பேசுமட வாருக்கென்ன தாயே-நாளை
காய்நரகில் வேதனையுங் கடுகச்செய்வார் மகளே! 43

தாய் தந்தைக்குச் சங்கைகெடும்பாங்கையர்க்குத் தாயே-அங்கே
காய்நரகில் வேதனையுங் கடுகச்செய்வார் மகளே. 44

மாமியைப்பே ணாதமரு மகளுக்கென்ன தாயே-நாளை
தாமதியா நரகத்தின்கீழ் தாழ்த்திடுவார் மகளே. 45

பசித்தவர்க்குப் பருக்தண்ணீப் பாவிக்கென்ன தாயே-அங்கே
அசைத்தகொப்பு நெருக்குங்கடா அலக்கழிக்கும்மகளே. 46

இந்தஎசல் பாடும் நெயினு முஹம்மதுக்குத் தாயே-எங்க
[illegible]யானவன் சுவனமது கொடுப்பானடி மகளே. 47

தாய்மகளேசல் முற்றிற்று.

றஹுமான் பேரில் முனாஜாத்து.

கடவுள் வாழ்த்து.

நேரிசை வெண்பா.

ஆதி ஒளியே அஹ்மது வில்லாகி
சோதி சுபுஹானல்லா நாயனியே—நீதி
நடத்தும் றஹுமானே நாவிலிருந் தெந்நாளும்
திடத்த வரமெனக்குச் செய்.

முனாஜாத்துமாலை.

அல்லா வெனுநாமங் கொண்ட கோவே
ஆலமடங்கலும் படைத்தவனே
சொல்லால் பெரியோனே யார்கு தாயே
துதிக்கும் பெருமைகள் பூண்டவனே
வல்லோ னுன்னுடை கிருபையாலே
வழுத்துஞ் சிறியவ னுரைக்குங் கவி
சொல்லிற் பிழைகள் தானிருந்தாகிற்
றணியே புரிகுவை றகுமானியே. 1

ஆலமடங்கலும் புவியேழும்
அனைத்தும் படைத்தவன் நீயேயல்லால்
தால மீதினி லொருவ ரில்லை
தக்க பெரியோனே றஸ்ஸாக்குவே
விசால மாகச்செய் வணக்க மெல்லாம்
சமது அஹதாக நிறைந்தவனே
கால காலமும் உனக்கே யல்லால்
கண்ணுள மணியான றஹுமானியே. 2

இல்லல்லா வெனுந் திக்கிரினில்
இறையோ னுன்னுடை நாமத்துடன்
சல்லல் லாவெனுஞ் சலவாத்திலே
சங்கை நபியையுங் கூட்டிச் சேர்த்தாய்
அல்லைக் களைந்திடச் செய்பவனே
சுல்லுக்குள் விரவங் கொடுப்பவனே
சொல்லால் வந்தவை யெந்தனக்குத்
துணைகள் புரிகுவை றஹுமானியே. 3

ஈனப் புவிதனி லென்சா னுவை
யிரட்டிப் பாக்கின்ற வஹ்ஹாபுவே
தான வந்தனி யானவனே
தக்க பெரியோனே றஸ்ஸாக்குவே

கோனே யுன்னுடை கிருபையாலே
குவலய மக்களை லெக்தனக்கு
வானோன் நீடித்து இருக்கச்செய்த
வல்ல பதவிதா றஹ்மானியே. 4

உந்தன் தனக்குள்ள பெத்துகளை
பொன்று மறியாத பாவியானும்
கந்த வணக்கங்கள் மிக விருக்கத்
தனித்துப் படிபாம லறியாமலே
உந்த னுக்குத்தான் தெரிந்த மட்டும்
இபாதத் தாச்செய்தேன் கண்மணியே
இந்தப் பாவிக்கு இனியாகிலும்
இரக்க மிகச்செய்வாய் றஹ்மானியே. 5

ஊக்க மிகச்செய்யும் மாமுனைஹயின்
உந்தன் கிருபைகளில்லாமலே
ஆக்க மிகவாகி யநேக காலம்
அதிக வருந்தங்கள் பட்டு விட்டேன்
ஏக்க மிகவாக இனியாகிலும்
என்றன் றனக்குத் தஞ்சமாகக்
காக்கக் கடவனு உன்றன் பேரில்
ஹக்கு பெரியோனே றஹ்மானியே. 6

உந்தன் குர் ஆனெனும் வேதத்திலே
உற்ற முந்நூற்றே டறுபதுதான்
அந்தத் தலத்திலே உந்த னைத்தான்
அதிக வணக்கமாய்த் தொழுகின்றனர்
இந்த லோகத்தி லுள்ளபேர்கள்
ஏதோ கௌரவ மாகத்தானும்
வந்த வகைபோலும் நமாசை விட்டு
மார்க்கந் தனைவிட்டார் றஹ்மானியே. 7

மார்க்கந் தனைவிட்டு மநகெட் டோர்கள்
மண்டலந் தனில் மிகுதியுண்டு
காக்குங் கருணைசர் மார்க்கம் விட்ட
கள்ள ஹறாமிக ளானபேர்கள்
சாக்குப் போக்கான வம்பு தும்பாய்த்
தந்த வணக்கங்க டன்னைவிட்டார்
எந்தும் புகழ்தனைக் கையேற்பவா
எனக்குக் கிருபைசெய் றஹ்மானியே. 8

காசு பணத்திலும் பெருத்தோர் கடான்
 சனம் அறிவுகளாய்ப் பார்த்தோர் கடான்
ஏசிப் பேசியே சென்ற போதும்
 இகழ்ச்சி செய்கின்ற மாந்தர்களைக்
கூசிறு பிடிக்குமே படைத்துப் போடு
 குவலயந்தனில் மறையவ நாகத்
தாவி மாயை வதைக்கத் தானும்
 தவற விட்டோரை றஹ்மானியே. 9

அஞ்சொருக்குமே தொழுந்துக் கொண்டு
 ஆனை சக்காத்து எடுத்தளித்துத்
தஞ்ச முன்னமே ஹஜ்ஜு செய்து
 தொகுப்பாம் தொழுகையைத் தெரித்தமட்டும்
தஞ்ச மாகவே ஜாய்ஆ நீவன்னும்
 நதுமாம் வெள்ளியாய ஹஜ்ஜு ஆக்கி
வஞ்சமில்லாமல் வணக்கஞ் செய்ய
 வல்ல பதவிசெய் றஹ்மானியே. 10

நப்பு ஆகிய நாயகனே
 நாதர் நபியுல்லா சமுகத்திலே
ஹஜ்ஜுப்படி சேகரன் அதிகமுண்டாய்
 சுத்தியே ஈகையம் மிகுதியிலே
தப்பிதமில்லா நன்றா தாதர்
 சங்கை நபியுல்லா ஒலியத்துனை
எப்பொழுதும் பார்த்தேன்
 உவந்து கிருபைசெய் றஹ்மானியே. 11

இம்மை மறுமையா மீதிரண்டில்
 இடைஞ்சற் படுவதைத் துன்பங்கட்குத்
தம்மை லாமட்டும் வணக்கஞ் செய்தேன்
 தனித்த ஹக்கா[illegible]யகனே
சம்மா லாறுமும் என்றனக்குத்
 துணை தான் நீயன்றி வேறொன்றில்லை
எம்பால் நேசிக்கும் கஷ்டங்களை
 நீக்கியே நீக்குவாய் றஹ்மானியே. 12

காலல் லாஹுத்த ஆலாவின்னும்
 பன்னு அருளித்திக்கி
இன்றுன் திட்டாக ஹர்லஹுன்
 எல்லா முறை சேர்ந்திட்ட பொருளாவது
இல்லை இல்லாத போதிலுமே
 மிறையுடை போய்ப விடத்தனிலே

ஆவி மீடந்தனிற் கேட்கச் சொன்னாய்
அறிவு தந்தருள் றஹுமானியே. 13

ஆவி மென்றுநீ சொன்னதிலே
அநேகம் பாவிகள் தானிருக்கு
சாலி ஹான்தோர் காமில்களைச்
சங்கை யுடனே பான் கண்டறிந்து
கோலி யவர்களி னிடந்தனிலே
குறித்த சரியத்தை நிலையுங்கேட்டு
வாலைப் பருவத்தில் முரீதுபெற
வல்ல உதவிசெய் றஹுமானியே. 14

மாசக் காமின்றும் மின் அகதின்
வலாக்கின் னல்லாக மன்யசாஉ
என்னுந் தருஜமா ஒருவருக்கி
டேற்றமுமில்லை யென்று சொல்லிப்
பின்னுஞ் சொல்லினைப் நாடினோரின்
பேணுந் தெளபாவைக் கபூல் செய்து
மன்னிப் பாவங்கள் பொறுப்பே னென்றும்
மதிதா னெனக்கில்லை றஹுமானியே. 15

மாடு தந்துநீ வயலுந் தந்தாய்
மக்கள் பலருநீ தானுந்தந்தாய்
ஆடுங் கனாசுத்தி னுள்ளிருந்தே
அநேக கோலங்க ளெல்லாஞ் செய்தாய்
வாடும் பயிருக்கு ஆதாரமாய்
வல்ல றஹுமத்து மிரக்கி விப்பாய்
காடு வனாந்திர மேகிடாமற்
காத்து ரக்ஷிப்பாய் றஹுமானியே. 16

ஆவ தொன்றுமே யில்லா[illegible]ன் நன்
அடிமை யென்று[illegible] யாசையாலே
ஆவல் கொண்டோ னுனதுபக்க
லடிக்கடி நாளும் புகழ்நாடி
பாவஞ் செய்திடு மெனது குற்றம்
பார்த்தியே னேநீயும் பொறுத்தருள்வாய்
எவற் படியேதான் நானடக்க
எனக்குக் கிருபைசெய் றஹுமானியே 17

ஆண்டவனே கப்பார் நாயகனே
அடிமை யென்றுனை சொல்லால் வந்த
பூண்ட தோசத்தைப் பிழைகளெல்லாம்
பொறுத்திடு மென்றும் தந்தை பந்து

மாண்டவர்களின் பிழைபொறுத்து
வல்ல பிலாலென்னுங் கொடியிற் சேர்த்து
ஆண்டு கிருபைசெய் திடுவாயென்றன்
அஹமது சமதான றஹ்மானியே. 18
எந்த னக்குநல் லறிவு தந்தோர்
இறையே உன்குர்ஆனை யோதித்தந்தோர்
வந்தெனக்குமே கிருபை செய்தோர்
வரும்படிப் பொருளுள மீய்ந்தோர்
தொந்த மாயெந்தன் கிளையபலார்
சொல்லும் சொற்பிழை பொறுத்தென்னுளும்
தந்தே உன்னருள் கிருபை செய்வாய்
சமது அஹமதான றஹ்மானியே. 19
சொன்ன முனாஜாத்து மாலைதன்னைத்
தப்புற வாக ஹுப்புடனே
அன்னம் போலவே தூபங்காட்டி
அழகாம் வெள்ளியுந் திங்களும்போ
உன்னை தமாக வோதும் பேர்க்கு
உந்தன் கிருபைசெய் ஜப்பாருவே
வண்ண மாலையாச் சொன்ன லெவ்வை
செயினு மதையாளும் றஹ்மானியே. 20

முனாஜாத்துமாலை முற்றிற்று.

நாகூர் வழிநடைச் சிந்து.

இன்னிசை.

முஹம்மதின் குல்பேரர் முஹியித்தீ னுக்கடுத்த
நன்னயஞ் சேர்நாகை நற்பதியி லேவாழும்
ஷாகுல் ஹமீதொலிமேற் சங்கைவழிச் சிந்துபாட
[illegible] குடியிருந்து நடத்துவா யென்கோவே.

பல்லவி.

கந்தூரி பார்க்கலாம் பெண்ணே—எழுந்
தென்பின்னே வாடி கண்ணே.

அநுபல்லவி.

நந்நிலா வும்பயிர் நின்வினைத்தவர்
நாயக ராமிறசூல்மஹா மூதடி
கொந்து லாவும்கயி பேர ருள்பெற்ற
கோமான் நாகைக் காதர்மீறா. கந்தூரி

சரணங்கள்.

கங்கை செறியது பொன்மணி தங்கிப்
காயல் நகர்தனில் நாளும்-வாழ்
காதரி ராவுத்தர் செயினு தன்பேரன்
காமன் செய்னாது லெவ்வை-எங்கள்

கண்மணி யானமு[illegible]ச ஒலி போ[illegible]
கத்தங்கள் பா[illegible]கா ஓதிக்-கொண்டு
நானங் கமழும் [illegible] மலர்த்தட்டம்
நண்ணிய சாலி[illegible]லேகில்-அதோ
குறைவில்லா மு[illegible]க் காடுதெரியுது
கோதைமயிலே [illegible]பெண்ணேடு நடவடி
பறைகிறேன் கே[illegible]ந்தப் பாதை வழிகூடிப்
பார்த்து நடந்துவா[illegible] பைங்கிளி யன்னமே. கத்தூரி
வல்லவர் நல்லவர் எல்லவருந் தங்கி
வாழ்முத்தை யாபுர மிது-எங்கள்
வல்லல் முலைகயநின் பள்ளியதி லேகி
வரிசைப் பாத்திகா வோது-வரி
வண்டுகள் மாமது வுண்டிசை பாடும்
மா[illegible]வளச் சோலையிப் போது-கண்டு
எற்றி யிறைவனைப் போற்றித் தொழுதிட
வித்து[illegible]சிறைக் கேது-உண்டு
சல்லாப மாகவே தாம்பூலந் தின்று
தண்கடை சிலம்பு கலீர்கலீ ரென்று
ஹல்லாசல் மன்சூர் கருத்தைக் கருதிக்
கடுக நடந்துவா காதல்கொள் என்னு[illegible]மே. கத்தூரி
உப்பு விளையும் நிலமென மென்றிதை
யுரைப்பார் பாரடி பெ[illegible]ணே-இதி
லுண்மை யதிசப் பணங்க[illegible] வரும்படி
யுண்டாம் நிசமடி கண்[illegible]ணே-வெகு
மெய்ப்புள கம்பெனிக் [illegible]பபொருள் மீசரம்
மென்மேலுஞ் சொல்கிறேன் பெண்ணே-அதில்
யிருந்த காவலாம் போலீசுக் காரர்கள்
மேன்மையைப் பாரடி கண்ணே-நன்றாய்ப்
பொங்கும் ஜலமது [illegible]ங்கும் பெருகிடும்
போர்புரி மன்னர்க[illegible] வஸ்தைப் பட்டிடும்
கஞ்சா ஜலமதி கெட்டா றுறவிட்டுக்
கண்ணே நடந்துவா பெண்ணொறு [illegible]னமே. கத்தூரி
தேசாதி தேசமெல் லாம்புகழும்மக
ராஜன் தூத்துக்குடி யாறு-எங்கள்
வெய்கு [illegible]ருகெயி ஜுஆலீம் பள்ளி
[illegible]பாய்ப் பாத்திகா ஓது-கத்தம்
பா[illegible]திகா ஓதி நேத்திக்கட னீந்து
[illegible]ங்கர்பத் தொழுநிங்கு தானே-ஊபயப்
பா[illegible]த்து நடந்துவா வட்டக் கிணறிதோ
பலகாரம் விற்கின்ற வீதி-உயர்
தங்க முருமலர் மல்லிகை சூடிய

சுந்தர மாமுகம் சந்த்ரப்ர காசமே
பங்கயப் பாதங்கொண் டெங்கப் பாவையே
பார்த்து நடந்துவா பைங்கிளி யன்னமே. கஸ்தூரி
இக்காரமான சிறப்புகள் செய்துபூச்
சென்டெடுத் தென்னுடன் சாரு-இத
தேசமெல் லாம்புக ழோங்குந் தூத் துக்குடி
செல்லியே உப்புள்ள நீரு-பெரும்
வற்றுச் சமுத்திர முற்றலே வீசிடும்
வள்ள மிகுங் கடற்றுறை அதில்
சேத்திரம் போலொடும் வங்கம் படவுகள்
மின்னுறந்தன் கண்ணுலே பாரு-இன்னம்
சேகர மாகுந் தெருவி னலங்காரம்
செப்ப முடியாது கிட்டங்கி யசபீச
பாச மிதோ துரை மார்களின் பங்களா
பார்த்து நடந்துவா றெயில்வே பேறலாம். கஸ்தூரி
ரூபாயும் மூன்று அணுவிரண் டெக்கிலுர்
ரூமில் விசாரிக்கத் தானே-சிகஸ்
ரூப்பிலை போசுணு டிக்கட்டு வாங்கியே
றெயிலி லேறிநீனும் மானே-டேஷன்
இங்கே யிருக்கின்ற கட்டட வேடிக்கை
கன்னமாய் நானுஞ்சொல் வேனே-முன்னால்
இஞ்சினேகப் பிகில் சத்ததால் டிரைவர்
இவ்வண்டி போகவிட் டானே-றெயில்
வேகமாய் வந்து மீளவிட்டான் டேஷன்
விங்கை வெகுவென மந்தா தெரியுது
பாகமாய் வச்சிருக்கலே யணிந்திடும்
பாவையே யென்னமும் தேவையோ கேளடி. கஸ்தூரி
சங்கின மேளம் முழங்கி யிலங்கிடுந்
தட்டப்பா ரையுக்கண் காட்சி-வண்டி
தாண்டியே ஓடிவருவதாற் பாரிதோ
தையலே மேர்மணி யாட்சி-வந்தோம்
இங்கேபார் திருநெல் வேலிக்கேகும் றெயில்
ஏறி யிறங்கும் பேர் மாட்சி-பார்த்தோம்
இந்தவண்டியில்வந் தேறும் விதமதை
பென்சொல்வேன் மீட்டிக்கு மீட்சி-ஜங்ஷன்
கண்டோங் கடம்பூர்கு மாரபுரந் தாண்டிக்
கடுகச்சாத் தாராந்தின் பாலமும் வந்து
விண்டோம் நடுவப் பட்டியிதோ சந்நிதம்
வேண்டும்பை ராகிக ளுக்குப் படிந்தாட. கஸ்தூரி
தேசமெல் லாம்புகழ் தென்மது ராபுரி
ஸ்டேஷனிதோ வந்தோம் பாராய்-இவ்

சில்லரை ஸ்டேஷன்கள் பற்பலவாம் கண்டோம்
திண்டுக்கல் திருச்சியே கோராய்-இதோ
ராஜன்வாழ் தஞ்சாவூர்க் கோட்டை தெரியுது
நங்கையே கண்ணுற்பாரீரோய்-இங்கே
நாகூர்க் கிளைவண்டி வந்திதோ நிற்குது
நாமங்கு செல்லுவோம் வாராய்-அதில்
கொங்கத்தா வங்கத்தா பொங்கலிக் கூட்டமும்
குதிரைக் குளமென்ற பந்தய ஆட்டமும்
இங்கும் அங்கும் ஜனங்க ளார்ப்பாட்டமும்
என்னநான் சொல்லுவேன் தருமெயிலேறுவோம். கந்
பாவையே தருமெயி லேறியிதோ நீடா
மங்கலம் வேகமா யோடும்-வண்டிப்
பாதை திருவாரூர் சிக்கல் தாண்டி நாகப்
பட்டணந் தேடியே நாடும்-இதோ
பூவையே நாகூரு ஸ்டேஷ னிறங்கினோம்
போக ஜனங்கள் கொண் டாடும்-இங்கே
பூரண [illegible]லர்த் தோரணம் வீதியிற்
போட்டிக் கொடிகள்மின் னுடும்-எங்கும்
நன்னய மாமிதுபோலே கிடையாது
நாகரீக முள்ள சாமான் வர்ணக்கடை
என்னென்ன ஷாப்புக ளெங்கெங்கு பார்த்தாலும்
எண்ண முடியாது ஏந்திழை யன்னமே. கந்தூரி
தையலே இங்குள்ள ஷாப்புக் கடைகளில்
சாமானைப் பார்க்கவுன் கண்ணும்-தேரிடி
தான்வேணும் பற்பல ஜவுளித் தினுசுகள்
தங்க மயம்போல மின்னும்-இதோ
துய்ய பலாக்கனி மாங்கனி மாதளை
சுந்தர வாழைக ளெண்ணும-நேரே
தோற்றம் பழங்களை யேற்றமா யிங்குநான்
சொன்னபடி வாங்கி யுண்ணும்-என்றன்
பாசத்தைப் பெற்றிடும் ஆசைக் கருங்குயில்
பக்ஷிமா யன்னமு மிச்சை நடைஒயில்
மாசற்றமேனி திரு வழகைப்பெற்ற
மாணிக்கமே மீரு காணிக்கை வைத்திடும். கந்தூரி
ஆகாயமட்டு மளாவியே நிற்கின்ற
அஞ்சு மனராவைப் பாரு-நல்ல
ஆளன்ருமஸ்தா காணிக்கைகலயம்
அந்தா யிருக்குது நேரு-இந்த
நாகைவாழ் காதர் மீருதரு காவைப்போல்
நாமெங்கே பார்த்தோ யிப்பேரு-நவ
ரத்ன மணியிட்ட மக்காமச் சன்னிதா

னத்தழகா மிதின் சிரு-நல்ல
சாயபு பிள்ளையாம் கேதகு ஷுசபு
சாயபு தருசாவிற் பாத்திகா வோது
சாயபு பிரோலி தண்டா மறைப்பதம்
தன்னை வணங்கித் தொழுதக்கோ அன்னமே கஸ்தூ
செஞ்சத்தி லஞ்சியி றைஞ்சிவலி யாரத்து
கோராகச் செய்தபின் மாதே-இறை
நேசமுடை னன்னம் வாசமுறும் சுபூர்
நின்றுகல் பாத்திகா ஓதே-பெரி
வஞ்சம் கிளிபோல் நாகை ஹமீதொலி
நந்தவன மிதன் மீதே-மலர்
நாட்டக் கொய்துவினை யாடித்திரும்புவர்
நாட்டம்வைத் துப்பாரிப் போதே-வழி
கூடிக் கூடிக் குலாவும் பக்கீர்களும்
கூட்டமாகச் சூர் ஆ ஹோதும் பக்கீர்களும்
கெஞ்சிக்கெஞ்சிநின் றிறைஞ்சம்பு ஆமைமையைக்
கேட்டுநடக்துவா வீட்டுக்கு அன்னமே. கஸ்தூரி
வீட்டுக்கு வந்தோமே அப்போது வெள்ளையும்
வெண்ணெய் தயிர்பால் நெய்யும-சீனி
வேலை பலகாரங் கனியல சம்பாரம்
விதவெரு கோதுமை நொய்யும்-இன்னம்
ஆட்டுக்கிடாவி னிறைச்சியு மீன்களும்
அன்னமாய்க் கொணர்ந்தாற் செய்யும்-பாகம்
அடுக்களைமூட்டி நீ சீக்கிரஞ் சமைத்து
அன்னமெனக்கு ... டையும்-இதோ
வேந்தன தசரதன் மைந்தன் ராமச்சந்த்ரன்
விட்ட கணைபோல வணங்க ளோடுது
மாந்தர்களோடி வருகிறா வேடிக்கை
வையம் நடுங்குது மையலே பாரடி. கஸ்தூரி
எட்டுத் திசைபதி னாறுகோ ணத்திலு
மிந்த வதிசய முண்டோ-பெண்ணே
எங்கத் தலமுங்கா ணிந்தத் தலத்திலுக்
கீடென்று சொல்லவா யுண்டோ-தஞ்சை
பட்டப்பர் தாபசிக்கு மகாராஜன் மீனுவும்
பள்ளி யலங்காரங் கண்டோம்-இதோ
பற்பல பாக்கிய வான்களாற் கட்டிய
பணிதி விநோதத்தை விண்டோகம் தேடி
மட்டற்ற தேசத்தார் வந்த விஸ்வாசமும்
வாகான மின்கொடி சந்த்ரப்ர காசமும்
பட்டத்து வெல்லை நூவீமாக வோசையும்
பார்த்து வருவோமவா நேத்திர அன்னமே. கஸ்தூரி

செங்கதிர் போலிலங் குஞ்சந்த னக்குடஞ்
சென்று நின்றுருளுந் தேரு-அதைச்
சேருக் தருக்க முரஸ்பல மேளங்கள்
சிறந்து முழங்குது பாரு-குழப்
பங்கயம் போலால வட்டக் கொடிகுடை
பாய்பரி சேனைகள் வீரு-மிகப்
யாளு பொடிக்கம்பு நிறைவா வீரர்
பழனி விளையாடுஞ் சீரு-கனல்
கக்குவா ணங்களா காயப்போய் மீளுது
கார்மேகம் போல பலநிறங் காணுது
பொங்கும் பொரி வாணம் போராடி நிற்குது
பூங்கொடி யன்னமே பாங்கடி முன்னமே. கஸ்தூரி

மல்லிகை முல்லை மலரணி நாடா
மருமணம் விற்குது பாரு-அதை
வாங்கும்பட் டிக்கயி றேங்கிய கரும்பப்பம்
வாடா முறுக்குகள் கூறு நல்ல
வெல்லம் பசுவெண்ணெய் பிஸ்கோத் தல்வா லட்டு
கிட்டாய்த் தினுசென்ன ஜோரு இதில்
வேண்டியதைப் பெற்றுக் கொண்டு திரும்பினம்
வெற்றிலை பாக்கையும் வாரு முகம்
காட்டுங் கண்ணாடிக் கடைபல ஷாப்புகள்
கண்டமட்டும் வாங்கு கதிர்மணிச் சீப்புகள்
பூட்டுந் திறப்புஞ்சா மான்பல சோப்புகள்
பூவையே வாங்கிக்கொள் தேவையால் இன்று. கஸ்தூரி

கஸ்தூரி பார்த்து விடிந்து முடிந்து
ஹூநீதொலி யாண்டகை பேரு பெருங்
காத்திர மாகவே நேத்தியாய்க் கஸ்தூரி
காணிக்கை யீய்ந்தாளத் தேரு நன்றாய்
வந்தனஞ் செய்மது ராபுரி டிக்கட்டு
வாங்கினேன் வாறெயி லேறு இதோ
வண்டிபா சாயிற்று பாரடி போகுது
வழியிற் பல டேஷன் பாரு மதுரை
கண்டோ மிக்க டேஷன் தன்னி லிறங்கடி
கையி லிருக்கின்ற காசு பணத்துடன்
பண்டார மதுரைப் பதியைப்பார்த் தேகலாம்
பாவையே கீழ்புரம் கோபுரந் தெரியுது. கஸ்தூரி

மங்கம்மா சத்திரந் தங்குமிடமது
வாகுமீ னாள்கோவில் தானே புது
மண்டபந் தன்னைக் கட்டி வைத்ததிரு
மலைநா யக்கர் பூமானே நிற்கும்

சம்மையான தேவி மார்களைப் பாரடி
ஜவுளிக்கடை பல மானே புஸ்தக
தொப்புப் பலபல தொப்புடன் வெங்கல
சாமான் பலன்னை தானே
எங்கும் நிறைந்தசின் காரத்தைப் பாரடி
இதிலேவைத் தேபோகஸ்த ரும்வொரு பேரடி
தங்குமால் கச்சேரி செச்சையுஞ் சீரடி
மஞ்ஜி திர்மானமும் வாசலின் நேரடி. கண்ணி
வேடிக்கை யாய்வினை யாடிக்கொண் டென்னுடன்
மெல்ல நடந்துவர கூடி மிக
மேன்மையான ரெயி லேறிநேம் டேசனில்
மெல்லிய நம்முரை நாடி முன்போல
வாடிக்கை போலே வழியிற் பலடேஷன்
வரவங் களரவ மோடி வண்டி
வந்தேறும் விந்தைதனை எந்தவிதஞ் சொல்வேன்
வந்தாக்ஷாத் தூக்குடி தேடி இங்கே
பாகமாம் வீடுதிக் கடையி லன்ன முண்டே
பாக்குடன் வெற்றிலைப் பட்டாளுல் கைக்கொண்டே
சேகரமாகிய மாடகூடங்கண்டே
சீக்கிர மிதைத் தெருவைக் கடவடி. கண்ணி
வானுறும் நீடித்திருக்கச் செய்யுமந்த
வள்ளல் கிருபையி னாலே இதோ
மாழுத்தை யாபுரம் முன்னக்கா பேத்தாண்டி
வாழ்நாம் சேர்ந்தோமிப் பாலே நல்ல
மானுருக் கர்பல் நகர்நெயி னுமது
மனமிரங் கச்சொல்ல தாமே மேலும்
வாழ்வுதந் தானும் வெயினு மதுவுக்கு
வல்லோன் பறக்கத்தி னாலே இந்த
நகரிலத் தோர்கள் கொண்டாட வருண்புரி
நாகூர்வழி கடைச் சிக்கு வீதி சரி
போனியே நாடோறுங் காக்கவைர் சரி
பெண்மணி யாகிய கண்மணி யன்னமே. கண்ணி

பல்லவி.

அல்லாஹு இலாஹ இல்லல்லாஹி.

அநுபல்லவி.

அல்லாஹு என்பவனே ஆதிரப்பி லாலமீனே
இல்லல்லா என்பவனே ஏகரப்பி லாலமீனே. அல்லா

சரணங்கள்.

ஆக்கமைப் படைத்த தூய நாயனும் நீயே
அவனின் தந்தையில்லாமனே ஆதிபிறையோனே அல்லா

ஞானநிலை யடங்கானே உண்மை றஹுமானே
ஆதி பெரியவனே அல்ஹம்து லில்லாஹி [illegible]
[illegible]த்தி லடங்கானே ஆதிறஹுமானே
ஆயிரத் திருநாமத் திடையவனும் நீயே அல்லா
தொண்டன் ஹஸனுஸன் சேராம லியானை நீ
தற்காக்கும் ஹக்கனும் சித்தனும் நீயே. அல்லா

பல்லவி.

இதுசமையம் வாரும்—ஔதுலகுவும்
வினைப்பிணியைத் தீரும்.

அநுபல்லவி.

மதின நகர்வாழும் மருமூது பேரரே-நாயகரே
[illegible] லகுத்தாபே நாயகரே குதுபிலகுத்தாபே. இது

சரணங்கள்

[illegible] முசிற் றாங்கும் வள்ளல் முகையதீனே
வந்தபிணியை நீக்கும் அப்துல்காதர் முகையதீனே இது
தானுமைக் கெஞ்சிக் கெஞ்சி நாவினுற் கேட்டது ஆ
வல்லோன் கபூலாக்க மருந்து தரவே தானும் இது
தொண்டன் ஹஸனுஸன் சேராமல் வியாதின்
தோஷம் பிணியகற்றும் துரையே முகையதீனே. இது

அச்சிடப்பொருளுதவிசெய்தவர் வாழ்த்து.

பங்கமொன்று மணுகாத காயல்வாழும் பரிவுடையோன் கிருபையினுற் பாக்யம் பெற்ற, அங்கமெனும் உடலவயம் வேதாங்கங்கள் அழகாகக் கற்றிருக்கும் அறிவைப் பெற்றோர், பொங்கலெனும் பொங்குகலின் பொச்சாப்புகரு போக்கடிக்குந் தானகற்றும் பொறுதியுள்ளோர், சங்கையுடனிந்நகரிற் சீமுவாக தவறாமல் நீதிசெலுத்த தானுமன்னன்.

இதுவுமது.

கருணையுடன் காதிரிரா வுத்தர்போன் காரியமாப் பாடியதோர் பதங்கள் சேர்த்துத், தருணமிர்த மெய்ஞ்ஞான அலங்காரக் கீர்த்தனைக்குத்தான் பொருளுதவி செய்தபோகன், தரணிதனித் தோங்க வாழ்ந்த மன்னன், தக்கசிதம் பரம்பிள்ளை தவத்தால் வந்து. பரணியெனும் பலம்போலே பரிசுபெற்ற பாலமுத்துப் பிள்ளையெனும் பசுபதியே.

குறுவிருத்தம்.

விண்டலத்திலினான் பாடிய பாடலை, மண்டலத்தினி லச்சிலேயற்றியே, அண்டமாவெளி யாக்கிய போதனே யண்டிலச புகழ்ச்தேற்றநீ வைப்பையே.

அமிர்தமெய்ஞ்ஞான அலங்காரக்கீர்த்தனைமுற்றிற்று.